# மக்கள் ஆய்வு (People Studies)

*வழங்கும்*

## தமிழகம் 2015
## முதல்வராக மீண்டும் ஜெயலலிதா: வளர்ச்சியா? தளர்ச்சியா?
## குடி அரசியல்: போராட்டமா? தள்ளாட்டமா?
## மாநில அளவிலான ஆய்வு முடிவுகள்
## &
## தமிழகம் 2016
## களமிறங்கும் புதிய "முதல்வர்கள்": புதிய கூட்டணிகள்?
## அதிர்ச்சிகளும் ஆச்சரியங்களும்...
## சட்டமன்றத் தேர்தலுக்கான ஒரு முன்னோட்டம்

*கள ஆய்வு நடந்த நாள்கள்:*

**2015 ஆகஸ்ட் 13-26**

*ஊடகவியலார் சந்திப்பு:*

**29 ஆகஸ்ட் 2015**

*இடம்:*

**சென்னை பத்திரிகையாளர் மன்றம்**

அரசினர் தோட்டம், சென்னை 600 002

*தொடர்புக்கு:*

மக்கள் ஆய்வு (People Studies)

122 வன்னியர் தெரு, சூளைமேடு, சென்னை 600 094

கிராமிய மக்கள் ஆய்வு & பயிற்சி மையம்

பளியன்குடி விலக்கு, மேலக்கூடலூர் கிராமம், லோயர் கேம்ப், தேனி மாவட்டம்

செல்: 8870341318 (தலைமை அலுவலகம்) / 8870431319 (களப் பணியகம்)

மின்னஞ்சல்: peoplestudies@gmail.com

---

"மக்களை ஆய்வது மக்களுக்காகவே"

# மக்கள் ஆய்வு (People Studies) வழங்கும்

## தமிழகம் 2015 - மாறும் வண்ணங்கள்

## தமிழகம் 2016 - ஒரு முன்னோட்டம்

# மாநில அளவிலான ஆய்வு முடிவுகள்

### *ஆய்வகப் பின்னணி*

"மக்களை ஆய்வது மக்களுக்காகவே" என்ற கொள்கையுடன் மக்களை மையப்படுத்திய பல்துறை ஆய்வுகளையும் பரப்புரைகளையும் பயிலரங்குகளையும் மக்கள் ஆய்வு (People Studies) தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மக்களின் உள்ளக் கிடக்கையை ஆய்வுப்பூர்வமாக அறிந்து, செயல்பூர்வமான திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியில், 2001 ஜனவரி தொடங்கி இதுவரை தமிழகம்-புதுவை மற்றும் தென்னிந்திய அளவில் 30-க்கும் மேற்பட்ட சுற்றுகளில் ஒன்றரை லட்சம் கி.மீ. வரை பயணம் செய்து பண்பாடு-அரசியல் தொடர்பான பேராய்வுகளை நடத்தியுள்ளது. கிராமப்புற இளைஞர், சிறார் மற்றும் மகளிரின் திறமைகளையும் தலைமைத்துவப் பண்புகளையும் வளர்க்கும் நோக்கில் கிராமிய ஆய்வு & பயிற்சி மையம் ஒன்றையும் நடத்திவருகிறது.

### *ஆய்வு அணுகுமுறை*

ஜெயலலிதா மீண்டும் முதல்வர் பொறுப்பேற்று ஏறத்தாழ மூன்று மாதங்கள் ஆகின்ற நிலையில், டாஸ்மாக்-குக்கு எதிரான போராட்டம் எதிர்க்கட்சிகளால் முடுக்கிவிடப்பட்டுள்ள சூழலில், வரும் சட்டமன்றத் தேர்தலை முன்வைத்து கட்சிகளும் முதல்வர் வேட்பாளர்களும் களமிறங்கிவரும் வேளையில், "திராவிடக் கட்சிகளுக்கு" மாற்று வேண்டும் என்ற கோஷம் ஒலிக்கத் தொடங்கியுள்ள பின்னணியில், தமிழக அரசியல் களத்தின் வண்ணங்களை ஆராயவும், வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தல் கள நிலவரம் குறித்த ஒரு முன்னோட்டமாகவும் மாநில அளவிலான ஆய்வினை மக்கள் ஆய்வு (People Studies) மேற்கொண்டது.

தமிழகத்தின் 28 மாவட்டங்களில், 80 சட்டமன்றத் தொகுதிகளில், ஆகஸ்ட் 13 முதல் 26 முடிய, பேரா. டாக்டர் ச. ராஜநாயகத்தின் நேரடி வழிநடத்துதலில் கள ஆய்வு வழி தரவுகள் சேகரிக்கப்பட்டன. இந்த ஆய்வில் 3370 பேரைச் சந்தித்துக் கருத்துக்கள் பதிவுசெய்யப்பட்டன.

தமிழ்ப் பண்பாடு-அரசியல் சூழலுக்கேற்ப, எண்ணியல் (quantitative) மற்றும் பண்பியல் (qualitative) கூறுகளை உள்ளடக்கி, பேரா. டாக்டர் ராஜநாயகம் உருவாக்கியுள்ள *சமூக-உளவியல் அணுகுமுறை* (social-psychological approach) இந்த ஆய்விலும் பின்பற்றப்பட்டது. சரளமான, இயல்பான கருத்து-உணர்வுப் பகிர்வுக்கு இசைவாக பெரும்பாலும் பதிலறு (open ended) வினாக்கள் கேட்கப்பட்டன.

### *பங்கேற்றோர் பின்னணி*

ஆண்களும் பெண்களும் ஏறத்தாழச் சம அளவில் பங்கேற்ற இந்த ஆய்வில் *வயதுரீதியாக,* வயது 20 வரை - 8.6, வயது 21 முதல் 30 வரை - 24, வயது 31 முதல் 45 வரை - 36.3, வயது 46 முதல் 60 வரை - 24 (மீதி - வயது 60-க்கு மேல்). *கல்விரீதியாக,* வகுப்பு 6 முதல் 12 வரை - 53.8, கல்லூரி அல்லது தொழிற்கல்வி - 28 (மீதி - ஆரம்பக் கல்விவரை மற்றும் படிக்காதவர்கள்). *தொழில்ரீதியாக,* கணிசமான அளவினர் கூலி வேலை / விவசாயம் செய்வோர் (27) மற்றும் சிறிய அளவில் சொந்தத் தொழில் செய்வோர் (23.6). பிறரில்: தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் - 19.9, மாணவர்கள் - 10.6, பெரிய அளவில் சொந்தத் தொழில் செய்வோர் - 5.5, அரசு ஊழியர் - 3.9 (மீதி - பிற தொழில்கள்). *சாதிரீதியாக,* தாழ்த்தப்பட்டோர் - 25.9, மிகவும் பிற்படுத்தப் பட்டோர் - 18.2, பிற்படுத்தப்பட்டோர் - 29.5 (மீதி - பிற (உயர்) சாதியினர் / தகவல்தர விரும்பாதோர்). *மதரீதியாக,* மிகப்பெரும்பான்மையோர் (84.3) இந்துக்கள். இஸ்லாமியர் - 7.2, கிறிஸ்தவர் - 4.3 (மீதி - பதில் தெரிவிக்காதோர்).

## ஆய்வு முடிவுகள்

***(1) மிக முக்கியத் தேவை:*** தமது ஊர் அல்லது தொகுதி அளவில் மிக முக்கியத் தேவையாக / பிரச்சனையாக சாலை மற்றும் போக்குவரத்து வசதி முதலிடம் பெற, மாநில அளவில் குடிப் பிரச்சனை கவனத்தை ஈர்த்துள்ளது. மக்கள் முன்வைக்கும் முதல் அய்ந்து பிரச்சனைகள்:

| ஊர்/தொகுதி அளவில் | |
|---|---|
| சாலை/போக்குவரத்து வசதி இல்லை | 26.9 |
| குடிதண்ணீர் வசதி இல்லை | 20.3 |
| குடிப் பிரச்சனை | 13.3 |
| சாக்கடை/கழிப்பிட வசதி இல்லை | 9.0 |
| வேலைவாய்ப்பு இல்லை | 8.4 |

| தமிழக அளவில் | |
|---|---|
| குடிப் பிரச்சனை | 41.7 |
| அரசுத் துறைகளில் லஞ்சம், ஊழல் | 15.9 |
| குடிதண்ணீர் வசதி இல்லை | 12.5 |
| வேலையில்லாத் திண்டாட்டம் | 8.4 |
| பணப்புழக்கம் இல்லை | 7.5 |

***(2) பிரச்சனைகளைத் தீர்க்கும் கட்சி:*** மேற்கண்ட பிரச்சனைகளைத் தீர்க்கும் திறமையுள்ளவையாக அதிமுக-வும் திமுக-வும் அடுத்தடுத்துச் சுட்டிக்காட்டப் பட்டாலும், எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் செய்யப்போவதில்லை என்ற பதிலே பெரும்பான்மை பெறுகிறது. முதல் அய்ந்து இடம் பெறும் கட்சிகள்:

| | | | |
|---|---|---|---|
| அதிமுக | 23.9 | தேமுதிக | 4.6 |
| திமுக | 19.3 | பாமக | 2.4 |
| | | பாஜக | 1.9 |
| **எந்தக் கட்சியும் செய்யப்போதில்லை** | | | **26.6** |

***(3) மக்கள் பிரதிநிதிகளின் செயல்பாடு:*** பல்வேறு மட்டங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் இதுவரையான செயல்பாடுகளைப் பொருத்த வரை, பாராட்டைவிடக் கசப்புணர்வே அதிகம் வெளிப்படுகிறது.

| | நன்று | சொல்லும்படி ஏதுமில்லை | மோசம் |
|---|---|---|---|
| நாடாளுமன்ற உறுப்பினர் | 20.4 | 34.8 | 44.8 |
| சட்டமன்ற உறுப்பினர் | 22.1 | 33.7 | 44.2 |
| நகராட்சி/பஞ்சாயத்துத் தலைவர் | 31.9 | 33.0 | 35.1 |
| வார்டு உறுப்பினர் | 30.1 | 32.6 | 37.3 |

***(4) அரசு அலுவலகங்களின் செயல்பாடு:*** அரசு அலுவலகங்கள்/அதிகாரிகள் மீது வெவ்வேறு விதங்களில் கடும் அதிருப்தியைப் பெரும்பாலோர் வெளிப்படுத்துகின்றனர். லஞ்சம் வாங்காமல் எந்த வேலையும் நடப்பதில்லை என்பது ஆணித்தரமாக (67.4) பதிவாகியுள்ளது. அரசு அதிகாரிகள் நேர்மையாக, கடமை உணர்வோடு செயல்படுவதாகத் தெரிவிப்போர் மிகச் சிலர் (8.4) மட்டுமே. அப்பாவி ஜனங்களைத் தேவையில்லாமல் இழுத்தடித்து அலைக்கழிக்கிறார்கள் (9.2), ஆளும்/தோழமைக் கட்சிக்காரர்களுக்கு மட்டுமே காரியம் ஆகிறது (6.5), பெரும்புள்ளிகள் சிபாரிசு இல்லாமல் எதுவும் நடப்பதில்லை (4.8) ஆகியவை பிற சிறுபான்மைப் பதில்கள்.

***(5) அரசு வேலைக்குத் தேர்ந்தெடுக்கும் விதம்:*** பல்வேறு அரசுத் துறைகளுக்கும் அதிமுக அரசு வேலைக்கு ஆள் எடுக்கும் விதம் ஒளிவு மறைவின்றி, திறமை/மூப்பு அடிப்படையில் அமைந்துள்ளதாகக் கருதுவோர் - 12.4. ஏனைய அனைவரும் (87.6) இது குறித்து மிகுந்த ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றனர். லஞ்சம் கொடுப்பவர்களுக்கே வேலை கிடைக்கிறது (62.8), அதிமுக-வினருக்கு/அமைச்சர்கள் சிபாரிசு செய்பவர்களுக்கு மட்டுமே வேலை கிடைக்கிறது (13.1) ஆகியவை அந்த ஆதங்கத்தின் முக்கிய வெளிப்பாடுகள்.

*(6) தற்போதைய அதிமுக அரசின் செயல்பாடுகள்:* ஜெயலலிதா மீண்டும் முதல்வராகப் பொறுப்பேற்று மூன்று மாதங்கள் ஆகவுள்ள நிலையில், அவர் தலைமையிலான அரசின் செயல்பாடுகள் குறித்த மக்களின் மதிப்பீடு கீழ்வருமாறு.

| | நன்று | சொல்லும்படி ஏதுமில்லை | மோசம் |
|---|---|---|---|
| மின்தடையை நீக்கும் நடவடிக்கைகள் | 65.1 | 13.6 | 16.1 |
| ஒழுங்கான ரேஷன் விநியோகம் | 63.9 | 15.8 | 15.6 |
| நலத்திட்டங்களின் செயலாக்கம் | 51.9 | 21.1 | 22.6 |
| சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பது | 49.8 | 23.3 | 22.3 |
| தொழில்துறையில் புதிய முதலீடுகளை ஊக்குவித்தல் | 24.0 | 33.0 | 36.4 |
| அண்டை மாநிலங்களுடன் நதிநீர்ப் பங்கீடு அணுகுமுறை | 22.5 | 27.8 | 38.1 |
| மணல் கொள்ளையைத் தடுக்கும் நடவடிக்கைகள் | 14.0 | 17.0 | 59.5 |
| கிரானைட் ஊழல் மீதான நடவடிக்கைகள் | 12.2 | 21.3 | 56.6 |
| அரசுத்துறைகளில் லஞ்சம்/ஊழலைக் கட்டுப்படுத்துதல் | 6.6 | 10.9 | 74.3 |
| குடிப் பிரச்சனையைக் கையாளும் விதம் | 5.3 | 11.8 | 77.9 |

கடந்த நவம்பர் மாத (2014) கணிப்போடு ஒப்பிடுகையில் சில அம்சங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதையும் வேறு பல அம்சங்களில் குறிப்பிடத்தக்க அளவில் எந்த மாற்றமும் நிகழாமல் இருப்பதையும், ஓரிரு அம்சங்களில் பின்னடைவைச் சந்தித்துள்ளதையும் காணமுடிகிறது.

*(7) மிகப் பொருத்தமான நலத்திட்டம்:* அதிமுக அரசு நடைமுறைப்படுத்திவரும் நலத்திட்டங்களில் மிகவும் பொருத்தமானவையாக மக்களால் பெரிதும் வரவேற்கப்படும் முதல் அய்ந்து:

| | |
|---|---|
| விலையில்லா விசிறி, மிக்ஸி, கிரைண்டர் | 89.0 |
| திருமண உதவித்தொகை | 73.6 |
| மாணவர்க்கு மடிக்கணினி | 72.8 |
| முதியோர் உதவித்தொகை | 69.7 |
| அம்மா உணவகம் | 56.2 |

*(8) அதிமுக அரசின் ஒட்டுமொத்தச் செயல்திறன்:*

| | நன்று | சொல்லும்படி ஏதுமில்லை | மோசம் |
|---|---|---|---|
| 2011 மே முதல் 2014 செப்டம்பர் வரை ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது | 59.1 | 23.0 | 5.6 |
| 2014 செப். முதல் 2015 மே வரை பன்னீர்செல்வம் முதல்வராக இருந்தபோது | 27.0 | 33.7 | 32.2 |
| 2015 மே முதல் ஜெயலலிதா முதல்வராக உள்ள இப்போது | 39.7 | 24.6 | 19.2 |

பன்னீர்செல்வம் முதல்வராக இருந்தபோது தமிழக அரசின் செயல்பாடுகள் குறித்து மக்கள் மத்தியில் பரவலான அதிருப்தி நிலவியதையும், ஜெயலலிதா முதல்வராக விளங்கிய முந்தைய ஆட்சியோடு (2011 மே முதல் 2014 செப்டம்பர் வரை) ஒப்பிடுகையில், அவரது தற்போதைய ஆட்சியில் திருப்தியின் அளவு குறைந்திருப்பதையும் அறியலாம்.

***(9) ஜெயலலிதா அணுகுமுறையின் தாக்கம்:*** வரும் சட்டமன்றத் தேர்தல் அறிவிப்புவரை ஜெயலலிதாவின் தற்போதைய அணுகுமுறை தொடர்ந்தால், தேர்தல் முடிவுகள் எப்படி அமையக்கூடும் என்பது குறித்த மக்களின் யூகத்தில், கூட்டணிக் கட்சிகளின் பலம் வெற்றி-தோல்வியை நிர்ணயிக்கும் என்பது முதலிடம் பெறுகிறது.

| | |
|---|---|
| பெருவாரியான இடங்களை வென்று அதிமுக ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளும் | **24.7** |
| அதிமுக-வுக்கு ஆட்சியமைக்கும் அளவு பெரும்பான்மை கிடைக்காவிட்டாலும் திமுக-வை விட அதிக இடங்களை வெல்லும் | **7.5** |
| அதிமுக-வுக்கும் திமுக-வுக்கும் கடும் போட்டி நிலவும், கூட்டணியின் பலத்தைப் பொருத்து முடிவு அமையும் | **26.2** |
| திமுக-வுக்கு ஆட்சியமைக்கும் அளவு பெரும்பான்மை கிடைக்காவிட்டாலும் அதிமுக-வை விட அதிக இடங்களை வெல்லும் | **22.6** |
| பெருவாரியான இடங்களை வென்று திமுக ஆட்சியைப் பிடிக்கும் | **8.3** |
| தேர்தல் முடிவுகளில் இதனால் சொல்லிக்கொள்ளும்படி எந்தப் பாதிப்பும் இருக்காது | **8.8** |

***(10) அணிமாறும் கட்சிகள்:*** தேர்தலுக்குத் தேர்தல் அரசியல் கட்சிகள் அணிகளை மாற்றிக் கொள்வதைச் சாதாரணமான விஷயமாகக் கருதும் போக்கு மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுகிறது.

| | |
|---|---|
| அரசியலில் இது சகஜம், பெரிதாக எடுத்துக்கொள்ளக்கூடாது | **58.1** |
| கூட்டணிக் கட்சிகளின் அணுகுமுறைகளில் முரண்பாடுகள் வரும்போது அணிமாறுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது | **17.4** |
| ஜெயிப்பது மட்டுமே அக் கட்சிகளின் நோக்கம், கொள்கைகளைப் பற்றி அக்கறையில்லை | **12.8** |
| அடிக்கடி அணிமாறும் கட்சிகளைத் தடைசெய்வது நல்லது | **8.2** |

***(11) அதிமுக - பாஜக கூட்டு?*** முதல்வர் ஜெயலலிதாவும் பிரதமர் மோடியும் சமீபத்தில் சந்தித்ததைத் தொடர்ந்து அதிமுகவும் பாஜக-வும் தேர்தல் உடன்பாடு காணும் வாய்ப்புள்ளதாகக் கணிசமானோர் கருதுகின்றனர்.

| | |
|---|---|
| மிக அதிகமான வாய்ப்புள்ளது | **37.0** |
| அதற்கான சாத்தியம் இருப்பதை மறுக்கமுடியாது | **23.1** |
| ஏதோ கொஞ்சம் நெருங்கிவருவதுபோலத் தெரிகிறது | **9.0** |
| கொஞ்சம்கூட வாய்ப்புக் கிடையாது | **13.9** |

***(12) திமுக - அதிமுக-விற்கு மாற்று?*** திமுக, அதிமுக ஆகிய கட்சிகளைத் தவிர தமிழகத்தின் பிற கட்சிகள்/இயக்கங்களில் ஆட்சியமைக்கும் அளவு திறமையும் வாய்ப்பும் உள்ளதாக எதுவும் அழுத்தமாகச் சுட்டிக்காட்டப்படவில்லை.

| | |
|---|---|
| திமுக-அதிமுக-க்கு மாற்றுக் கட்சிகள் தமிழகத்தில் கிடையாது | **53.4** |
| தேமுதிக தலைமையில் ஆட்சியமைக்கும் சாத்தியம் | **12.2** |
| பாமக தலைமையில் | **11.9** |
| பாஜக தலைமையில் | **1.4** |
| காங்கிரஸ் தலைமையில் | **1.1** |
| இதரக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்தால் | **4.0** |
| தமிழ் அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்தால் | **3.5** |

மாற்று குறித்த மக்களின் தற்போதைய மனநிலையை நோக்கும்போது, வரும் சட்டமன்றத் தேர்தல் பிரதானமாக திமுக மற்றும் அதிமுக-வுக்கு இடையேயான போட்டியாக இருக்கும் என யூகிக்கலாம்.

***(13) அதிகாரத்தில் பங்கு?*** கூட்டணி அமைப்பதற்கு முன்நிபந்தனையாக அதிகாரத்தில் பங்கு கேட்டுச் சில கட்சிகள் வலியுறுத்துவதற்குப் பரவலான வரவேற்புள்ளது.

| | |
|---|---|
| வரவேற்கத்தக்க கோரிக்கை | 35.5 |
| நல்லதுதான், ஆனால் நடைமுறைச் சாத்தியமில்லை | 35.2 |
| கூட்டணி உருவாக்குவதற்கு இத்தகைய நிபந்தனை உதவாது | 5.1 |
| திமுக, அதிமுக தாமே முன்வந்து நடைமுறைப்படுத்த வேண்டும் | 2.2 |

***(14) வேட்பாளராக வாக்காளர்:*** "நீங்கள் ஏன் தேர்தலில் நிற்கக் கூடாது?" என்ற கேள்வியை வாக்காளரின் முன் வைக்கும்போது, அந்த அளவுக்குச் செலவுசெய்யப் பணபலம் இல்லை என்ற பதில் முதலிடம் (39.0) பெறுகிறது. பிற பதில்களில் முக்கியமானவை: நேரடி / கட்சி அரசியலில் ஆர்வமில்லை (16.9), போதிய வயது / அனுபவம் இல்லை (11.3), சுயேட்சையாக நின்றால், பொதுவாக மக்கள் ஆதரிப்பதில்லை (10.5), தேர்தல் வன்முறைகளை எதிர்கொள்ளும் அளவு ஆள்பலம் இல்லை (8.4), கட்சித் தலைமையிடம் பரிந்துரை செய்ய ஆள் இல்லை (3.5).

***(15) தேர்தல் முறையின் பலவீனம்:*** தற்போது தேர்தல் நடக்கும் விதத்திலுள்ள முக்கிய பலவீனமாக, வாக்குகளை விலைக்கு வாங்குவது மிக வலுவாக (63.4) முன்வைக்கப்படுகிறது. கள்ள ஓட்டுப் போடுவது (12.2), தமக்கு வாக்களிக்குமாறு மிரட்டுவது (3.1), வாக்காளர் பட்டியலில் தம் கட்சிக்காக போலி வாக்காளர்களைச் சேர்ப்பது (2.8), வன்முறையில் இறங்கி வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுவது (2.2), தேர்தல் ஆணையத்தின் உதவியுடன் வாக்குப்பதிவு எந்திரத்தில் தில்லுமுல்லு செய்வது (1.7) ஆகியவை பிற சிறுபான்மைப் பதிவுகள்.

***(16) தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு:*** தேர்தல் ஆணையத்தின் தற்போதைய செயல்பாடுகள் குறித்து இரு முரண்பட்ட பார்வைகள் அழுத்தம் பெறுகின்றன. ஆளும் கட்சிக்குக் கட்டுப்பட்டுச் செயல்படுகிறது என்ற பார்வை முதலாவதாகவும் (45.7), அடுத்த இடத்தில் நடுநிலையாகச் செயல்படுகிறது (36.2) என்ற பார்வையும் இடம் பெறுகின்றன. முழுவீச்சில் செயல்படப் போதிய அதிகாரம் இல்லை (3.8), தேர்தல்முறையில் சீர்திருத்தம் செய்யாமல் இதனால் திறம்படச் செயல்பட முடியாது (1.2), ஆணைத்தின் அமைப்புமுறையையே முற்றிலும் மாற்றி அமைக்கவேண்டும் (1.1) ஆகியவை பிற உதிரிப் பார்வைகள்.

***(17) கணிப்பு பற்றிய கணிப்பு:*** கருத்துக் கணிப்பு என்பது கருத்துச் சுதந்திரத்தின் ஓர் அம்சம் (38.3), மக்கள் மனப்போக்கை அறிந்துகொள்ள உதவுகிறது (26.7) ஆகிய பெரும்பான்மைப் பதில்கள் கருத்துக் கணிப்புகளுக்கு ஆதரவாகவும், இதனால் பிரச்சனைகள் அதிகமாவதால் தடைசெய்ய வேண்டும் (17.0), எந்தச் சமூக நன்மையும் இல்லாத வீண்செலவு என்பதால் இது தேவையில்லை (4.7) ஆகியவை கணிப்புகளுக்கு எதிராகவும் முன்வைக்கப்படுகின்றன. அரசியல் உள்நோக்கத்துடன் நடத்தப்படும் கணிப்புகளுக்கு மட்டும் தடை (2.9), கணிப்புகள் பெரும்பாலும் தவறாகவே அமைந்துவிடுவதால், இவை தேவையில்லை (1.4), சில அரசியல்வாதிகளின் வீண் பயத்தை முன்னிட்டு இவற்றைத் தடைசெய்ய முயல்வது சரியல்ல (1.4) ஆகியவையும் சிலரது நிலைப்பாடுகள்.

**(18) அடுத்த முதல்வர்:** வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலைக் குறிவைத்து அரசியல் கட்சிகள் காய் நகர்த்தத் தொடங்கியுள்ள தற்போதைய அரசியல் சூழலின் பின்புலத்தில், தமிழகத்தின் முதல்வராவதற்குரிய தகுதி, திறமை, வாய்ப்பு ஆகியவை அமையப்பெற்ற ஆளுமைகளாகத் தமிழக வாக்காளர்கள் மதிப்பீடு செய்யும் பட்டியலில் இடம் பெறும் முதல் அய்ந்து தலைவர்கள்:

| | |
|---|---|
| ஜெயலலிதா | 31.56 |
| ஸ்டாலின் | 27.98 |
| கருணாநிதி | 21.33 |
| விஜயகாந்த் | 6.24 |
| அன்புமணி | 2.27 |

இரண்டு புள்ளிகளுக்கும் குறைவாகப் பெற்று, முதல்வர் பட்டியலில் அடுத்த அய்ந்து இடங்களில் இருப்போர்: வைகோ (1.85), திருமாவளவன் (1.13), ஜி.கே.வாசன் (1.01), தமிழிசை (0.93), சீமான் (0.84).

நேரடி அரசியலில் இதுவரை இல்லாத நடிகர்கள் யாரும் முதல் இருபது பேர் கொண்ட பட்டியலில் இடம்பெறவில்லை.

கட்சிசாராத, பொதுவாழ்க்கையில் பிரபலமான நபர்களான சகாயம் ஐஏஎஸ், சுப. உதயகுமார் ஆகியோரும் ஒருசிலரால் குறிப்பிடப்படுகின்றனர்.

**(19) யாருக்கு வாக்கு?** தற்போதைய அரசியல் சூழலின் பின்னணியில், இன்று வாக்களிப்பதாக இருந்தால் முதலிடத்தில் அதிமுக-வும் அதைத் தொடர்ந்து மிகக் குறுகிய இடைவெளியில் திமுக-வும் வருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| **அதிமுக** | **34.1** | **திமுக** | **32.6** |
| தேமுதிக | 4.0 | பாமக | 3.0 |
| **பாஜக** | **2.9** | **காங்கிரஸ்** | **1.6** |
| சொல்லமுடியாது | 12.8 | நோடா | 3.2 |

கடந்த நவம்பர் கணிப்பில் மூன்றாவது இடத்தில் இருந்த பாஜக, இப்போது சட்டமன்றத் தேர்தலின் பின்னணியில், தேமுதிக மற்றும் பாமக-வுக்கு அடுத்த இடத்தில் பின்தங்கியுள்ளது.

வெவ்வேறு காரணிகளின் அடிப்படையில் வாக்களிக்கும் விதத்தை குறுக்காய்வு (cross tabulation) செய்தால், தமிழக அளவில் பரவலான ஆதரவைப் பெற்றுள்ள அதிமுக, ஒருசில தரப்பினரிடையே திமுக-வை விடப் பின்தங்கியிருப்பது தெரிகிறது.

*மாவட்டரீதியாக,* சென்னையில் அதிமுக-வை விட சற்று அதிக ஆதரவு பெற்ற கட்சியாகத் திமுக விளங்குகிறது. ஒன்பது மாவட்டங்களில் இரு கட்சிகளும் சம பலத்துடன் உள்ளன. ஏனைய மாவட்டங்களில் அதிமுக முன்னிலை வகிக்கிறது.

*கல்விரீதியாக,* கல்லூரி-தொழிற்கல்வி கற்றோரிடையே திமுக-வுக்கு ஆதரவு அதிகம். பிற தரப்பினர் அனைவரிடையேயும் அதிமுக-வுக்கு அதிக ஆதரவு உள்ளது.

*சாதிரீதியாக,* பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடையே அதிக செல்வாக்குவுடன் திமுக விளங்க, தாழ்த்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற (உயர்) சாதியினர் ஆகிய அனைத்து வகுப்பினரிடையேயும் அதிமுக செல்வாக்குப் பெற்றுள்ளது.

*வயதுரீதியாக,* 20 வயதுக்குக் கீழான இளைஞரிடையே திமுக-வுக்கு சற்று அதிக வரவேற்புள்ளது. மற்ற அனைத்து வயதுப் பிரிவினரும் அதிமுக-வுக்கு முதலிடம் வழங்குகின்றனர்.

*பாலியல்ரீதியாக,* அதிமுகவை விடச் சிறிதளவு அதிகமாக திமுக-வுக்கு ஆண்கள் மத்தியில் ஆதரவுள்ளது. ஆனால் பெண்களின் ஏகோபித்த ஆதரவு அதிமுக-வுக்கு உள்ளது.

*மதரீதியாக,* இஸ்லாமியரின் வாக்கு திமுக-வுக்கு அதிகம் செல்கிறது. இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் அதிமுக-வை அதிகமாக ஆதரிக்கின்றனர்.

சென்னை பத்திரிகையாளர் மன்றம்
அரசினர் தோட்டம், சென்னை 600 002

பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்
& குழுவினர், மக்கள் ஆய்வு

**29 ஆகஸ்ட் 2015**

*கவனத்திற்கு:* (1) மக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தியுள்ள எண்கள் அனைத்தும் சதவீதத்தைக் குறிக்கின்றன. (2) கேள்விக்கான பதில்களில் முக்கியமானவை மட்டும் பட்டியலிடப் பட்டுள்ளதால், சதவீதங்களின் கூட்டுத்தொகை 100-ஐ விடக் குறைவாக இருக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பதில்களைச் சொல்லக்கூடிய வினாக்களுக்கு மட்டும் கூட்டுத்தொகை 100-ஐ விட அதிகமாகும்.

**நன்றி**

## நீரோட்டம்:
### அரசியல் பண்பாடும் பண்பாட்டு அரசியலும்

*கள ஆய்வுகளில் 21-ஆம் நூற்றாண்டுத் தமிழகம்*

*வெறுமனே தேர்தலை முன்வைத்த கணிப்புகளுக்கு மாறாக, தேர்தல் பின்புலத்தில் மக்களை மையப்படுத்திய, நேர்மையான, நடுநிலையான, நம்பகமான, வெளிப்படையான, துணிச்சலான களஆய்வுகளாக இருப்பதால், வரலாறு வரைவுக்கான மூல ஆவணங்களில் நீரோட்டம் என்ற இந்த நூலும் ஒன்றாகத் திகழ்கிறது.*

*இந்த நூற்றாண்டில் இதுவரை தமிழகம் / தமிழர்கள் பயின்று வந்துள்ள பாதைகள், பார்வைகளின் திசைகள், உந்து விசைகள், எதிர்கொண்டுள்ள சவால்கள் / சவடால்கள், அவற்றின் பின் உறைந்துள்ள / சிதைந்துள்ள வரலாறுகள், பண்பாட்டு ஆணிவேர்கள் / எச்சங்கள், அரசியல் கணக்குகள் / பிணக்குகள், தேர்தல் சூத்திரங்கள் / சாத்திரங்கள், ஊடகச் சித்து விளையாட்டுக்கள்... என நிகழ்கால வரலாறு வரைவியலின் அனைத்து அம்சங்களையும் ஒருங்கே திரட்டித் தருகிறது.*

*ஆய்வாளர்கள், அரசியல் நோக்கர்கள், அரசியல்வாதிகள் தமிழகப் பண்பாடு-அரசியல் பரிணாமங்களை இன்னும் சற்று நெருங்கிச் சென்று புரிந்துகொள்ள மேலாய்வு செய்வதற்கான தரவுகளின் பெட்டகமாக விளங்குகிறது.*

*மக்கள் பெயரைச் சொல்லி / மக்களை அணுகி மேற்கொள்ளப்படும் ஆய்வு எத்தகையதாக இருந்தாலும் அந்த ஆய்வின் முடிவுகளை அறிந்து கொள்ளும் உரிமை ஆய்வுசெய்யப் பயன்படுத்தப்பட்ட மக்களுக்கு உண்டு. அவ்வாறே, வெகுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளத்தக்க விதத்தில் ஆய்வுகள் குறித்த விவரங்களை வெளிப்படையாக வைத்திருக்க வேண்டிய கடமை ஆய்வாளருக்கு உண்டு. இத்தகைய கருத்தியல் பின்னணியில், "மக்களை ஆய்வது மக்களுக்காகவே" என்ற கொள்கைவாக்கை மெய்ப்பிக்கும் மற்றொரு முயற்சி நீரோட்டம்.*

*ஆசிரியர்:* **ச.ராஜநாயகம்** / *வெளியீடு:* **மக்கள் ஆய்வகம்** / ISBN: 978-81-910217-9-0

## POPULAR CINEMA AND POLITICS IN SOUTH INDIA
### REIMAGINING MGR AND RAJINIKANTH

This work breaks new ground in the understanding of South Indian cinema and politics. Through incisive analysis and original concepts it illustrates the private, public and cinematic personas of MGR and Rajinikanth. It challenges the popular and scholarly myths surrounding them and shows the constant negotiation of their on-screen and off-screen identities. The book revisits the entire political history of post-Independent Tamil Nadu through its cinema, and presents a refreshing psycho-political and cultural map of contemporary South India. Replete with illustrative diagrams and graphs that lay bare the tropes of South Indian films, this work will be a major intervention in the understanding of Indian cinema.

This absorbing volume will be an important read for scholars, teachers and students of film studies, culture and media studies, and politics, especially those interested in South India.

***Author:*** **S. Rajanayagam** / ***Publisher:*** **Routledge** / ***ISBN:*** **978-1-13-882203-0**
*Visit:* http://www.routledge.com/books/details/9781138822030